உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

சித்தாந்தம்.

தொகுதி ௮.] 1919௵ ஜூலை௴ [பகுதி ௭.

தசபுராணம்.

நிலைவலி யின்றியெங்கு நிலனோடுவிண்ணு நிதனஞ்செய் தோடுபுரமுன்
றலைவலி வஞ்சியோடி யரியொடுதேவ ரரணம்புகத்த னருளால்
கொலைநலி வாளிமூள வரவங்கை நாணுமனல் பாயநீறு புராமா
மலைசிலை கையிலொல்க வளைவித்த வள்ளலவ னமக் கோர்சரணே.

(இ-ள்) நிலைவலியின்றி = நிலைத்தலாகிய வலியில்லாமல், நிலனோடு = பூமியும், விண்ணும் = ஆகாயவுலகமும், எங்கும் = எவ்விடத்தும், நிதனஞ்செய்து = அழிவுசெய்து, ஓடு = பறக்கின்ற, புரம் = திரிபுரங்களின், அலையின் நலிவு = அலைத்தலாகிய துன்பத்திற்கு, அஞ்சி = பயந்து, ஓடி = ஓரிடத்தும் நில்லாதோடி, அரியோடு தேவர் = விஷ்ணுமுதலாகச் சொல்லப்பட்ட எல்லாத்தேவர்களும், அரணம்புக - அடைக்கலம் அடைய, தன்னருளால் - தனது அருட்டன்மையால், கொலைநலிவு = கொலையாகிய துன்பத்தைச்செய்யும், வாளிமூள - பாணமாகிய விஷ்ணுமூர்த்தி நமது தொழில்களொழிந்ததென்று துன்புற, அரவங்கை நாணும் -- வாசுகியாகிய சிறுநாணும், அனல்பாய -- அக்கினியால்மூழ்க, நீறுபுரமாம் = திரிபுரம்நீறுக, மலை = மேருமலை, சிலை = வில்லாக, கையில் = திருக்கரத்தினிடத்தே, ஒல்கவளைவித்த = அதன்செருக்கு ஒழிய குழையும்படி வளைவித்த, வள்ளல்அவன் - வள்ளலாகியசிவபெருமான் நமக்கு = அடியேங்களாகிய நமக்கு, ஓர் சரண் ஆம் = ஒப்பற்ற அடைக்கலப்பொருள் ஆவன், ஏ -- அசை.

திரிபுராதிகள் மிக்க பலம்வாய்ந்தார் என்பது போதர, 'நிலைவலி'யென்றும், மண்ணுலகத்தாரே யன்றி விண்ணவரும் அவ்வசுரர் மூவர் வலிக்கு உடைந்தோடினர் என்பது தோன்ற 'நிலனோடு விண்ணும்' என்றும், மண்ணவரும் விண்ணவரே யன்றி விஷ்ணுமூர்த்தி முதலிய திதிக்கடவுளும் படைப்புக் கடவுளாகிய பிரமனும், பெருந்தேவரும் துன்புற்று ஓடினர் என்பது பொருள்பட 'அரியோடு தேவ ரரணம்புக' என்று அருள் செய்ததாகும். புன்னகையால் புரமூன்றும் எரித்தானென்றும் தாம்தேராணமையாலேயே திரிபுரம் ஜயிக்கப்படும் என்று இறுமாந்து இருந்த இறுமாப்பைத் தீர்த்தான் என்றும் உணர, "கொலைநவி வாளிமூள வரவங்கைநாணு மனல்பாய நீறுபுரமா, மலைசிலை கையிலெரல்கவளைவித்த வள்ள லவனு நமக்கோர் சரணே" என்று அருள்செய்தனர்.

முன்னொரு காலத்து, வித்துன்மாலி. தாருகாக்ஷன், கமலாக்ஷன் என மூன்றசுரர்கள் சிவபெருமானை நோக்கித் தவங்கிடந்து பலவரங்களைப் பெற்றுத்திரிபுரமென மூன்றுபுரங்களைநிருமித்து அவற்றுளிருந்துகொண்டு ஏழுலகத்தவரையும் நலிவுசெய்து வருகின்ற காலத்தில் விஷ்ணு மூர்த்தி முதலிய தேவர்கள் சிவபெருமான் சந்நிதானத்திற் சென்று "இறைவனே பாற்கடலில் தோன்றிய விஷம்போல் திரிபுராதிகள் வுலகத்தை நலிவுச் செய்கின்றனர். அவ்வாலகால விஷத்தைத் திருவமுதுசெய்து அடியேங்களைக் காப்பாற்றினதுபோல் இப்போதும் இவ்வசுரர்களை ஒழித்து காத்து அருளல்வேண்டும்" என்று பிரார்த்தித்தனர். கருணையங் கடலாகிய சிவபெருமான் அப்பிரார்த்தனையைத் திருச்செவியேற்றுத் திரிபுராதிகளை எரித்தற்குரிய தேரினையும் போர்க்கருவிகளையும் சித்தப்படுத்துங்கள்என்று திருவாணை தந்து தாம் வெள்ளியங்கிரியினின்றும் எழுந்தருளி, சித்தப்படுத்தியிருந்த தேரினிடத்தே சென்று, அத்தேராக நின்ற தங்களுடைய உதவியே யல்லாமல் திரிபுரத்தைச் சயித்தல் ஆகாது என்று அகந்தை கொண்டிருந்த தேவரது அகந்தை நீங்கும்படித் தேரின்மீது தமது திருவிரலூன்றுதலும் தேராகநின்றதேவர்கள், பெருமானது வலிக்குஆற்றாது வருந்தி முதலில் அச்சுமுரிந்து ஒடிந்தது. பிறகு பெருமான் திரிபுரத்தை நோக்கிச் சிரித்தலும் அம்முப்புரம் நீறாயது என்பது புராணமாகும்,

இதனை,

"தச்சுவிடுத்தலும் தாம்அடி யிட்டலும்
அச்சு முரிந்ததென் றுந்தீபற"

என்றதனாலும்,

" தடமதில்க ளவைமூன்றுந் தழலெரித்தவந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் றிருமால்காண் சாழலோ "

என்றும் அருளிய திருவாக்குகளானு மறிக.

பத்திராதியர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர் நான்மணி மாலை.

தொகுதி - 8 - பகுதி - 6 - பக்கம் - 127 - தொடர்ச்சி.

நேரிசை வெண்பா.

பெருமான் றமிழ்க்கமலைப் பெம்மான் கைம்மானும்
கருமா னுரியதளுங் கச்சு—மொருமானுஞ்
சங்கத் தடங்காதுந் தார்மார்புங் கண்டக்கா
லங்கத் தடங்கா தவா.

(இ-ள்) பெருமான் = யாவர்க்குந் தலைவன், தமிழ்க்கமலைப் பெம்மான் = தமிழ்வளரும் திருவாரூரின்கண் எழுந்தருளிய பெரியோனது, கை = திருக்கரத்தினிடத்தே தாங்கிய, மானும் = தாருகவனத்து ரிஷிகளால் ஏவிய மானும், கருமான் = யானையினை, உரி = வுரித்த, அதளும் = தோலினையும், கச்சும் ஒருமானும் = வாரணிந்த ஒப்பற்ற மான்போன்றுளாகிய இடப்பாகத்திலெழுந்தருளிய உமாதேவியையும், சங்கத்தடங்காதும் = சங்கக்குழையினையணிந்த விசாலமான திருச்செவியினையும், தார்மார்பும் = மாலையினையணிந்த திருமார்பும், கண்டக்கால் = தரிசிக்கின், அவா = ஆசையானது, அங்கத்து அடங்காது = மனத்தினுள் ளடங்காது. (எ-று.)

மற்றைய பொருள்களில் செல்லுகின்ற அவா நீடித்தலில்லாது ஒழிதலால் பெருமான் திருக்கோலத்தைக் காணுகின்ற அவா மேன்மேலும் வளருவதாதலால் அக்குறிப்புத் தோன்ற இவ்விதம் அருளியதாகும்

இதனை 'தூய்மையென்ப தவாவின்மை - மற்றது வாய்மை வேண்டவரும்' என்னும் திருக்குறளின் உரையால் அறிதல்வேண்டும்.

கட்டளைக் கலித்துறை.

வாவியம் போருகஞ்சூழ் கமலேசர் புள்வாய் கிழித்த
தூவியம் போருகந்தோரு நின்றோர் துணைத்தாளடைந்த
வாவியம் போருகந் தாயிரங் கூற்றுடன் முனுமஞ்சே
னாவியம் போருக நன்னெஞ்சமே யவர் நாமங்களே.

(இ-ள்) நன்னெஞ்சமே=நல்ல மனமே, வாவி=குளங்கள்தோறும் அம்போருகஞ்சூழ்=தாமரைகள் நிறைந்த, கமலேசர்=திருவாரூரிலெழுந்தருளிய சிவபெருமான், புள்-நாரையாக வந்த அசுரனது, வாய்-வாயினை, கிழித்த=இரண்டாகக் கிழித்த, தூவி=இறகினையுடைய, அம்பு=பாணமாகிய விஷ்ணுமூர்த்தியானவர், ஓர் உகந்தோறும்=ஒவ்வோர் யுகத்தும், நின்று=நிலையாகத் தவஞ்செய்து, ஓர் துணைத்தாள்=ஒப்பற்ற இரண்டு திருவடிகளை, அடைந்த=சேர்ந்த, அவர் நாமங்களை=அவரது திருப்பெயர்களை, நாஇயம்புக=நாவானது சொல்லட்டும், ஒருக=துதிக்கட்டும், இவ்வாறு செய்வாயாயின், ஆவி=எனது வுயிரை, உகந்து = இச்சித்து, ஆயிரங்கூற்று=ஆயிரங்கூற்றுகள், அம்போர்=கொடிய போரினை, உடன் முனும்=செய்யினும், அஞ்சேன்=பயப்படேன். எ-று.

பெருமான் திருவடித்தாளினை அடைந்தோரை தென்றிசைத் தலைவனாகிய யமன், அணுகுவதில்லை என்பது போதர, இது அருளியதாகும்.

இதனை,

"அந்தணாள நின் னடைக்கலம்புகுத வவனைக்
காப்பது காரணமாக
வந்தகாலன்ற னாருயிரதனை வௌவினாய்க் குன்றன்
வண்மை கண்டடியேன்
எந்தை நீயெனை நமன்றமர் நலியினிவன் மற்றென்
னடியானென விலக்குஞ்
சிந்தையால் வந்துன் றிருவடியடைந்தேன் செழும்பொழிற்
றிருப்புன் கூருளானே"

"பொன்னார்திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் போற்றிசெய்யு
மென்னாவி காப்பதற் கிச்சையுண்டே லிருங்கூற் றகல

மின்னுருமூவிலைச் சூலமென்மேற் பொறிமேவு கொண்டல்
துன்னார்கடந்தையுட் டூங்கானைமாடச் சுடர்க்கொழுந்தே"

தந்தையார்போயினார் தாயரும் போயினார் தாமும்போவார்[போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார் கொண்டு
எந்தநாள் வாழ்வதற்கே மனம்வைத்தியா லேழை நெஞ்சே
யந்தணா ரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்சனெஞ்சே. என்னுந்
தேவாரங்களால் உணர்தல்வேண்டும்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

நாம வேற்படைக் கடவுளை பயந்தருள் நங்கைதென் கமலேசர்
வாமபாகத்தைக் கொள வலப்பாக நீர்மங்கை கொண்டனள் போலாந்
தாமநீற்றொளி தன்னிறங் காட்ட வெண்டலை நிரைநரை காட்டக்
காமர்பூங்கொடி மடந்தையர் மதர்விழிக்கய லுலாவர லாலே.

(இ-ள்) தாமநீற்றொளி = வரிசையாகவுள்ள விபூதியின் ஒளியானது, தன்னிறங்காட்ட = தனது வண்ணத்தினைக் காட்டவும், வெண்டலை நிரை = வெண்மையாகிய தலைகளின் வரிசையானது, நரைகாட்ட = நரை போலிருக்கவும், காமர்பூங்கொடி = அழகிய பூங்கொடியையொத்த, மடந்தையர் = பெண்களது, மதர்விழி = களித்த விழியாகிய, கயல் = கயல்மீன்கள், உலாவரலால் = உலாவுதலால், நாமம் = அச்சத்தைத் தருகின்ற, வேற்படை = வேலாயுதத்தைத் தாங்கிய, கடவுளை = சுப்பிரமணியக்கடவுளை, பயந்து = பெற்று, அருள் = உலகத்தோர்க்கு அருளிய, நங்கை = உமாதேவியானவள், தென்கமலேசர் = தெற்கின்கண்ணுள்ள திருவாரூரின்கண் எழுந்தருளிய தியாகராஜப் பெருமானது, வாமபாகத்தை = இடப்பாகத்தை, கொள = அடைய, வலப்பாகம் = வலப்பாகத்தினை, நீர்மங்கை = கங்கையானவள், கொண்டனள் போலாம் = அடைந்தது போலாகும். எ-று.

பெருமான் உலா வருங்காலத்து வீதியிலுள்ள மங்கையரெல்லாம் அவன் திருமேனியைத் தரிசித்து நின்றார்களாதலால் அம்மிகுதி தோன்ற அவன்மீது படர்ந்த நீற்றொளியை ஜலமாகவும், பெண்களது நீலக்கண்களைக் கயல்மீன்களாகவும் உவமித்தனர்.

நேரிசை ஆசிரியப்பா.

பருமுலை சுமந்து வாங்கிய நுசுப்பிற்
புரிகுழன் மடந்தையர் பொன்னெடு மாடத்
தொண்கதிர் வயிரமுந் தண்கதிர் நீலமுஞ்
சேயொளி பரப்புஞ் செம்மணிக் குழாமு

மாயிரு ளறந்து மழகதி ரெறிப்பன
சுரநதி முதல வரநதி மூன்றுந்
திருவ நீண்மறுகிற் செல்வது கடுப்ப
வொள்ளொளி ததும்பு மொண்டமிழ்க் கமலைத்
தெள்ளமு திறைக்குந் திங்களங் கண்ணி
தீநிறக் கடவுணின் றாண்முறை வணங்குதுங்
கூற்றெனப் பெயரிய கொடுந்தொழி லுளைய
னாற்றமில் யாக்கை யுவர்நீர்க் கேணிப்
புலத்தலை யுயிர்மீ னலைத்தனன் பிடிப்ப
வைவளி பித்தென வமைத்து வைத்திருந்த
முத்தலைத் தூண்டி றூண்டியத் தலைவாழ்
நாண மிதப்ப நோக்கித் தாழா
தயிறலைத் தொடங்கி யெயிறலைத் திருத்தலிற்
றள்ளாமுயற்சி தலைப்பட் டொழிந்தென
வெள்குரீஇ மற்றவன் விம்மித னாக
வருட்பெருங் கடலினவ் வாருயிர் மீனங்
கருக்குழி கழியப் பாய்ந்து தெரிப்பரும்
பரமானந்தத் திரையொடு முலாவி
யெய்தரும் பெருமித மெய்த
வையநின் கடைக்க ணருளுதி யெனவே.

(இ-ள்) பொன்னெடுமாடத்து = பொன்போல் ஒளிரும் நீண்டதோர் மாடத்தில், பருமுலை சுமந்து = பருத்தமுலைகளைச் சுமந்து, வாங்கிய = சிறுத்த, நுசுப்பின் = இடுப்பினையுடைய, புரிகுழல் = பின்னியகூந்தலையுடைய, மடந்தையர் = பெண்கள், ஒண்கதிர்வயிரமும் = ஒளிதங்கிய கிரணங்களையுடைய வயிரக்கற்களும், தண்கதிர் நீலமும் = குளிர்ந்த கிரணங்களை வீசும் நீலக்கற்களும், சேயொளி பரப்பும் = நெடுந்தூரம் ஒளியினை வீசும், செம்மணிக் குழாமும் = செந்நிறந் தாங்கிய மாணிக்கக் கூட்டங்களும், மாயிருள் = பெரிய இருட்கூட்டத்தினை, அறந்து = நீக்கி, மழகதிர் = இளமையாகிய கிரணத்தினை, எறிப்பன = வீசுவன, சுரநதிமுதல = கங்கை, யமுனை, சோனையாகிய, வரநதிமூன்றும் = சிறந்த நதிகள்மூன்றும், திருவ நீள் மறுகில்-செல்வந்தங்கிய நீண்டவீதிகளில், செல்வதுகடுப்ப-போவதை யொக்க, ஒள்ளொளி ததும்பும் = மிகுந்த வொளியானது அதிகரிக்கும், ஒண் தமிழ் கமலை = சிறந்த தமிழ் வளரும் திருவாரூரின்கண், தென்

அமுது=தெளிந்த அமுத கிரணத்தினை, இறைக்கும்=வீசும், திங்கள் அம் கண்ணி=சந்திரனாகிய அழகிய மாலையினைத் தரித்த, தீ நிறக்கடவுளே = அழல் நிறம்வாய்ந்த கடவுளே, கூற்று எனப்பெயரிய=ஆயுளைக் கூறுசெய்வதால் கூற்றன் எனப் பெயர்கொண்ட, கொடுந்தொழில் நுளையன் = கொடுமையாகிய தொழிலைச்செய்யும் வலைஞன், உயிர்மீன்=ஆன்மாவாகிய மீனினை, அலைத்தனன்=வருத்தி, பிடிப்ப=பிடிக்கும்படி, ஐவளி பித்து என=சிலேத்துமம், வாதம், பித்தம் என்று, அமைத்துவைத்திருந்த=பொருந்தியிருந்த. முத்தலைத்தூண்டில்=மூன்று தலையினையுடைய தூண்டிற்கொம்பினை, தூண்டி=செலுத்தி, அத்தலைவாழ்=அத்தூண்டிற்கொம்பின் முதலில்நின்ற, நாணமிதப்பநோக்கி=சடையாகிய மிதப்பினைப் பார்த்து. அயிறலைத்தொடங்கி=வருத்துவதை யாரம்பித்து, எயிறு அலைப்ப=பற்களைமென்று, இருத்தலில்=இருப்பதில், தள்ளாமுயற்சி=நீங்காத முயற்சி, தவறுபட்டு=குற்றமடைந்து, ஒழிந்தென=ஒழிந்தது என்று, இவள்குரீஇ=வெட்கமடைந்து, மற்றவன்=அக்கூற்றுவன், விம்மிதனுக=ஆச்சரியப்படும்படி, அவ்வாருயிர்மீனம்=அந்த அருமையான உயிராகிய மீனானது, சருக்குழிகழிய=பிறவிநீங்க, அருட்பெருங்கடலின்=தேவரீரது அருளாகிய பெரியசமுத்திரத்தில், பாய்ந்து=குதித்து, தெறிப்பரும்=அறிவதற்கரிய, பரமஆனந்தத்திரையோடும்=பரமானந்தம் என்கிற அலையோடும், உலாவி=உலாவப்பெற்று, எய்தரும்=அடைதற்கரிய, பெருமிதம் எய்த=இறுமாப்பினையெய்த, ஐய=ஐயனே, நின்=தேவரீரது, கடைக்கண்=கருணைக் கடைக்கண்ணினை, அருளுதியெனவே=அருள்செய்வாயென்று, நின்=தேவரீரது, கால்=பொற்பாதங்களை, முறை=பல முறை, வணங்குதும்=நான் வணங்குவேன்.

பத்திராதியர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்ட மயம்.

சகலசாஸ்திர நிர்ணய சங்கிரகம்.

தொகுதி-8-பகுதி-6-பக்கம்-141-தொடர்ச்சி.

பதின்மூன்றாவது சர்வராலுந் தேவரென்கிற லக்ஷணம் சருவருமிருதய கமலத்தில் தியானம்பண்ணுகிற வஸ்துவுக்கு தேவரென்று சகல சாஸ்திர நிர்ணயம். அது சாம்பசிவனே யென்கிறதற்குப் பிரமாணம். அதர்வணசிகா உபநிடதமும் முமூட்சுக்கள் சகலத்தையும் விட்டு தியானிக்கவேண்டிய வஸ்து சிவமொன்றேயென்று யூகித்துப்போகையாற் சர்வராலும் தியானம்பண்ணுகிற வஸ்து சாம்பசிவனே, அரிபிரமாதி தேவதைகளுக்கு தியானம் சொன்னதற்கு போக்கேதென்னில் அவர்களுக்கு சுருதியிற்சொருபதியானமில்லை புராணங்களிற்சொல்லுகிறதேயென்னில் யோக சாஸ்திரத்தில் விட்டுணு பிரமாதி தேவதைகளுக்கு கனிட்டதானமும் உருத்திரனுக்கு இருதய முதலாக உக்கிரட்ட தானங்களும் சொல்லுகிறதினாலும் சுருதிகளினாலும் இருதயபுண்டரீகத்திலிருக்கிறவர் மகேஸ்வரரென்றும் சம்பு சிதாகாச மத்தியிலிருப்பாரென்றும் சொல்லுகிறதினாலும் இதயதான முடையவருக்கே தெய்வத்துவம் சொருப்தியானம் இரண்டாம் வேதம் நாராயண உபநிடதம்சொல்லிமுடிந்தவுடன் சொல்லுகிற சொருபதியான மந்திரத்தாலும் கைவல்ய உபநிடதத்திற் விராட்புருடன் இருதய புண்டரீகத்திலிருக்கிறவர் மூன்று கண் நீலகண்டம் அம்மையுடனே கூடியிருக்கிற பரமேசுரனென்று சொல்லுகையினாலும் மற்றுள்ள உபநிடதப் பிரமாணத்தினாலும் சொருபதியானம் சாம்பசிவனுக்கே. பதின்மூன்றாவது சர்வராலுந் தேவரென்கிற லக்ஷணமுற்றும்.

பதினாலாவது சர்வபோகமுங் கொடுக்கிறதில் அத்தசத்தியுடையவரென்கிற லக்ஷணம். போகமாவது பரத்தில் விட்டுணு பிரமா இந்திரன் அக்கினி முதலோர் பதமும் இகத்திற் சகலபோகமுங் கூட போக

மென்றே சகல சாஸ்திர நிர்ணயம். அது கொடுக்கிறது அலுத்த சத்தி யுடையவர் சாம்பசிவனே. இதற்குப்பிரமாணம் முதல்வேதத்தில் ருத்திரர் உம்முடைய ஐசுவரியத்தை வேண்டி பிர்மா விட்டுணு தேவதைகளும் உம் முடைய லிங்கத்தி லுபாசித்து தங்கள் தங்கள் பதத்தை யடைந்தார்க ளென்கிற வசனத்துக்கு புராணவசனங்கள் விட்டுணு மரகதலிங்கத்திலும் பிர்மா சிவலிங்கத்திலும் இந்திரன் வச்சிர லிங்கத்திலும் உபாசித்து தங் கள் தங்கள் பதமடைந்தார்களென்றதினாலும் பாரதம் ஆரண்யபர்வம் தீர்த்த யாத்திரையில் விட்டுணு ருத்திரனை வெகுகாலம் பூசித்து சகல செகத்துக்கு ஆதிபத்தியமும் செகத்தை இரக்ஷிக்க அதிசய சத்தியடைந் தாரென்றும் அவர் திருவவதாரங்களிற் பூசித்து சகல காமமு மடைந்தா ரென்றும் பாரதம் துரோணபர்வமும் சகல புராணங்களிலும் சொல்லு கிறதினாலும் வியாசர் பூசித்து சுகரை யடைந்ததினாலும் பிரம்மா சிருட்டிக் கிறதை விட்டு ரக்ஷிக்கிறது தானவர்களை சங்கரிக்கிறது இந்திரன் சொர்க்க பதத்திலிருக்கிறது முதற்பத்துக்கிரந்தம் சகலபுராணங்களிலும் பிரசித்தம் அதிலே சகலதேவதைகள் ரிஷிகள் ராஜாக்கள் முதலோர் சிவபூசையி னாலே சகலமுமடைந்ததினாலும் இன்னும் பிரமாணம் வெகுவித மல்லா மல் உபமன்னிய பகவானுக்கு பால்வேண்டியதற்கு திருப்பாற்கடலை வர வழைத்து கொடுத்ததினாலும் மனிதசென்மத்தில் கயிலாயத்தில் விளையாட் டினால் வில்வத்தழையை பறித்து சாமிமுடிமேற் போட்டதற்கு முசுகுந்த சக்ரவர்த்தியாகக் கட்டளையிட்டதினாலும் திருவண்ணாமலையிற் றவளையும் புழுகுபூனையும் அறியாமையினாலே பூவும் புழுகும் சுவாமிபேரிலே எறி னதற்கு இராஜாவாகப் பிறக்கச்செய்ததினாலும் பிரதோஷ சிவராத்திரி யில் அறியாமற் பிரதக்ஷிணம் செய்த திரிக்கு காலுக்கு ராஜத்துவங் கட் டளையிட்டபடியினாலும், திருவானைக்காவிற் சிலந்தி பூச்சிக்கும் யானைக்கும் ராஜத்துவங் கட்டளையிட்டதினாலும் விபூதி ருத்திராக்ஷங்களை திரியக்குகள் தரித்ததற்கு ராஜத்துவங்கொடுத்ததினாலும் சோமவாரவிரத மனுட்டித்த சீமந்தனிக்கு மரித்துப்போன பர்த்தாவை யழைப்பித்ததினாலும்பத்தாளுக் காக மரித்துப்போன பிள்ளையை யழைப்பித்துக் கொடுத்ததினாலும் மாதா பிதா சங்கங்களென்றவருக்கு முதலாய சகல பாவத்தையே போக்குகிற தினாலும் இன்னுங் காசி முதலான தலத்திற் சகல சராசரங்களும் உபா சித்து பலன் பெற்றதினாலும் சகல காமங் கொடுக்கிறதில் அலுத்த சத்தி யுடையவன் சிவனேயாகையால் ஸ்ரீருத்திரத்திற் சிவனை வந்தனம்பண்ணி சமக்ஷத்திலே சகல போகமுங் கேட்கிறதுடனே விட்டுணு பிரமா இந்தி

ரன் அக்கினி குபேரன் முதலானபேர் பட்டங்கேட்டு சர்வ விக்கினந்தி சடசத்தியில் அலுத்த சத்தியு மிவருக்கென்றே சொல்லுகிறது. ஆகை யாற் சாம்பசிவனுக்கே அலுத்த சத்தியென்று சகல சாஸ்திர நிர்ணயம். பதினாலாவது அலுத்தசத்தி லக்ஷணம் முற்றும்.

பதினைந்தாவது மோக்ஷகர்த்தாவென்கிற லக்ஷணம். மோக்ஷமா வது பாசத்தைவிட்டு நீங்கி சிவஞானத்தைப் பெறுகிறது. அது சாம்ப சிவனே யல்லாமல் இரண்டாந்தேவதைகளினாலே பாசத்தைவிட்டு நீக்கப் போகாது அது எதனாலேயென்றால் சாம்பசிவனொருவனே பதி மற்றுள்ள வெல்லாம் பசுக்கள் என்று சகல சாஸ்திர நிர்ணயம். ஆகையாற் பசுக் களெல்லாம் பாசத்திலே அகப்பட்டிருக்கிறதினாலே ஒன்றுக்கொன்று பாசத்தை விடுவித்துக்கொள்ள மாட்டுமோ. அதைப்பூட்டின பதியே விடுவிக்கவேண்டுமாகையாற் அச்சுபேதர் சுவேதாச்சுவதர உபநிடதம் ஆகா சத்தை பாய்போலச் சுருட்ட வல்லவனாயினும் சிவனைத்தவிர மோக்ஷத்தை யடைகிற ஆத்மாக்களில்லை யென்று சொல்லிப்போயிற்று இதுவல்லா மல் இயற்கையுணர்வு முற்றுமுணர்தலுமுள்ள புருடனுக்கே சர்வவிக்கினத் துவம். அந்த புருடனே சாம்பசிவனென்று முதலிலே விரித்துச் சொன் னோமே ஆகையால் அவனொருவனே இயல்பாகப் பாசங்களில் நீங்கினவன் மற்றுள்ளபேருக்கெல்லாம் அவர் நீக்க பாசங்கள் நீங்கினபேராகையால் பசு பதி சத்தத்தினாலும் சர்வ விக்ன சத்தியினாலும் அவரே மோக்ஷ கர்த் தாவென்று சகல சாஸ்திர நிர்ணயம் இன்னும் பிரமாண திருட்டாந்தங் களினாலும் சொல்லுகிறோம். மகாமிருத்துஞ் சயஞ்செபித்தால் மிருத்து வின் வசத்தினின்று திட்டாந்தஞ் சொல்லிவிட்டு அமிர்தமாகிற மோக்ஷ மடைவேனென்று சொல்லுகிற சுருதி பிரமாணத்தினாலும் மகா பாக அமிர்தமுண்டே, மோக்ஷம் அந்தமயமாயிருக்கிற ஸ்ரீ ருத்திரத்தை செபியுங்களென்கிற சுருதி பிரமாணத்தினாலும் மந்திரபுஷ்பத்தில் சகலத் தையும் விட்ட சந்நியாசிகள் பிரமலோகத்தை யடைந்து கர்ப்பாந்தாத் திற் பிரமாவுடனே கூட முத்தியடைவார்களென்கிற சுருதி பிரமாணத் தினாலும் சங்கு சரா வியாதிக்கு வைத்தியரென்கிற சுருதியினாலும் பஞ்ச கிருத்தியத்திற்கு சிருட்டி திதி இரண்டும் பிரமா விஷ்ணுக்களுக்கு ஆக்ஞா பித்து மற்ற மூன்று தொழிலும் தாம் வகித்து இரட்சிக்கையிலே நின்ற அனுக்கிரகத்தினாலே முத்திகொடுக்கிற கர்த்தா சிவனென்றே சொல்லு கிறது. சகல சாஸ்திர பிரமாணத்தினாலும் இன்னும் பிரமாணம் வெகு வாகையாற் சாம்பசிவனே மோக்ஷகர்த்தாவென்று நிர்ணயம். வித்வான்

கள் விட்டுணுவினுடைய பரமபதத்தையே எப்போதும் பார்த்துக்கொண் டிருப்பார்களென்கிற சுருதி வசனத்துக்கு மோக்ஷகர்த்தா ஆகையினாலே விட்டுணுவினுடைய பதமென்றே யோசிக்கலாம். சட்டியினாலே விட்டுணுவுக்கு அப்பாலிருக்கிற சிவபதமென்று யோசிக்கலாம். பஞ்சமியினாலே யோசித்தாற் சுருதிகளுக்கெல்லாம் விரோதம் சட்டியினாலே யோசித்தாற் சுருதி விரோதமில்லை. அது எப்படியென்னிற் மந்திர புட்பத்தில் ருத்ரனுக்குமேல் பரமில்லையென்று நிர்ணயமானதினாலும் ருத்திரனொருவனே வஸ்து இரண்டாம் வஸ்து - இல்லையென்கிற சுருதியினாலும் பரத்துக்கு பரம பிரமதேவர், அவற்கு பரம விட்டுணு, அவற்கு பரமேசுரன், அவற்கு சரியுமில்லை அதிகருமில்லை யென்கிற சுருதியினாலும் அன்னம் பிரமதேவர், சாரம் விட்டுணு, புசிக்கிறவர் மயேசுரனென்கிற சுருதியினாலும் எயிக்கிய சொரூபம் விட்டுணு எயிக்கியத்துக்கு ஈசுரன் ருத்ரன். பிரகிருதி விஷ்ணு; புருடன் மயேசுரனென்கிற சுருதியினாலும் அரியும் பிரமாவும் தேடிக்காணாமல் போனார்களென்ற சுருதியினாலும் இருக்கில் உருத்திரனுடைய லிங்கத்திலருச்சித்து விட்டுணுவும் தேவதைகளும் தங்கள் பதமடைந்தார்களென்று சொல்லுகிறதினாலும் கைவல்யோப நிடதம் விட்டுணு ருத்திரர்பிரசாபதி யன்னியர்களுக் கெல்லாமடையிற் பதம் சாம்பசிவ பதமே யென்று நிச்சயித்ததினாலும் சட்டியினாலேயோசித்து விட்டுணு பதத்திற்கு அப்பாலிருக்கிற சிவபதமென்று நிச்சயமாகையால் அஞ்சாம் வேதமாயிருக்கிற பாரதம் சாந்திரார்வத்தில் மோக்ஷதனமம் அனுஸ்மிருதியில் அந்தபகவானுடைய சம்பந்தம் நான் எனக்கவர் கெட்டுப்போகாத. என்ற நாராயணர் வசனமும் அந்தவஸ்துவை தேவர்களும் ரிஷிகளும் அறியமாட்டார்கள். நாராயணரொருவரே யறிவரென்கிற வசனமும் குருசிஷிய சங்கவாதத்திலும் பரமாத்மா நாராயணரை வயிக்கும் பரமாத்மாவையொன்றும் வகியாது. என்ற சாங்கியவசனமும் இருபத்தைந்தாந்தத்துவம் ஆத்மா அவர்விட்டுணு இருபத்தாறாந்தத்துவம் சின்மயமென்று நாராயணியத்தில் நாலோகத்துக் கெல்லாமாத்மா பாண்டுநந்தன் நமக்கும் பரமாத்தமா ருத்ரன். அவனையாகிலு முபாசிக்கிறோமென்ற கிருஷ்ண தேவர்வசனத்தினாலும் இன்னம்பாரதப் பிரமாணம்வெகு - புராணம் பிரமாணம் வியாசர் புயஸ்தம்பத்தில் நாராயணர்வந்து நம் கர்த்தா மயேச்சுரமென்று சொன்னவசனம் சகலபுராணங்களிலும் பிரசித்தம். கூர்மபுராணத்தில் அரியுமயனும் நீகர்த்தா நான் கர்த்தா வென்ற சமவாதத்தில் வேதம் நாலும் பிரணவமும் ரூபீகரித்து நீங்களிரண்டுபேரும் கர்த்தாவல்ல. எல்லாவற்றிற்கு கர்த்தா மயேசுரனென்று சொல்லிப்

போகையாலும் பரமசிவமாகிற சமுத்திரத்தில் அரிபிரமாதி தேவதைகளெல்லாந் திவலையென்று பிரமகீதை சொன்னதில் சகல புராணத்திலும் பிரமலோகத்துக்கப்பால் விட்டுணுலோகமென்று மதற்கப்பாற் சிவலோகமென்று சொன்னதினாலும் இன்னும் பிரமாணம் வெகுவாகையாற் விட்டுணு பதமென்ற சுருதிக்கு சட்டியினாலே விட்டுணுவிக்கு அப்பாலிருக்கிறது சிவபதமென்றே சகலசாஸ்திர நிர்ணயம். இதுவல்லாமற் சின்முத்திரை தரிசிப்பித்து சனகாதிகள் பாசத்தை அரித்ததினாலும் பரத்தை தரிசிப்பித்து பதஞ்சலிவியாக்கிர பாதர் முதலோர் பாசத்தை அரித்ததினாலும் அவரே மோக்ஷகர்த்தா வென்றறிக. இதுவல்லாமல் விட்டுணு கபிலாவதாரமாக சிவனிடத்தில் சாங்கியஞானம் உபதேசித்துக்கொண்டாரென்கிற சுருதிபிரமாணத்தினாலும் வெதிரியாச்சிரமத்தில் நாராயணருக்கு மயேசுரரெழுந்தருளி சகலஞானமு முபதேசித்ததை பாரதத்திற் கிருட்டிணதேவர் அருச்சுனனுக்கு உபதேசித்தாரென்ற கூர்மபுராணவசனத்தினாலும் பாத்மபுராணம் உத்தரகாண்டத்திற் பூரண அவதாரமாயிருக்கிற ராமபத்திரசுவாமிக்கு சிவகீதையடங்கலும் சிவனுபதேசித்ததினாலும் சூதசங்கிதையில் ஞானகாண்டமு நதிச்சரசோதிக்கு உபதேசித்துபின்பு நாராயணருக் குபதேசித்ததினாலும் பிரமகீதைமுதல் பிரமாவுக்குபதேசித்தும் உத்திரகாண்டம் வியாழபகவானுக்குபதேசித்துஞ் சுகருக்கு சாங்கியஞான முபதேசித்தாரென்றும் சகலபுராணங்களிலும் சொல்லுகிறதினாலே இன்னும்பல பிரமாணங்கள் வெகுவாகையாற் சாம்பசிவனே மோக்ஷகர்த்தா வென்றறிக. விஷ்ணுசமயத்திற்கு சாரூபமேயில்லை. அந்த சாரூபத்திற்கு வெகுநாள் நாராயணரையுபாசித் தடையவேணும். காசியிலேமரித்த சராசரங்களுக்கு எளிதாகச்சிவன் சாரூபத்தைக்கொடுக்கிறாரென்று சகலசாஸ்திரங்களும் சொல்லுகிறதினாலும் அநேக கோடிகாலந் தவசுபண்ணிவருகிற முத்தியை திருவாரூரிலே பிறந்தபேருக்கும் சிதம்பரத்தை தெரிசித்தபேருக்கும் அருணாசலத்தை நினைத்தபேருக்கும் எளிதாக முத்திகொடுக்கிறாரென்றும் சகலபுராணவசனத்தினாலும் பாரதம் ஆரண்ணிய பருவத்திற்றீர்த்தயாத்திரையி லுருத்திரகோடி யென்கிற தீர்த்தக்கரையில் அக்கோடிபிரம்ம ரிஷிகள் ஏககாலத்திலேதனித்தனியேருத்ர மூர்த்தியைக்காணவேணுமென்று தவசுபண்ணுகையிற் கோடிருத்ரரூபமெடுத்து ஏககாலத்திலே தரிசனங்கொடுத்த சிவன் முத்திகொடுத்தா ராகையாலிந்த தீர்த்தத்துக்குப்பேர் உருத்திரகோடி இந்தப்படி கூர்ம புராணத்திலிருக்கிறபடியினாலும் நந்திகேசுரர் தண்டிகேசுரர் மார்க்கண்டர் பிருங்கிருடி அகஸ்தியர் முதலானபேருக்கு நித்திய

தத்துவங் கொடுக்கிறதினாலும் காசிமுதலான தலத்திலநேக ஆத்மாக்களுக்கு சாலோக சாமீப சாரூபசாயுச்சியங்களை கொடுத்தாரென்றும் வைதீகத்திலும் லௌகிகத்திலும் ,பிரசித்தமாகையாற் சாம்பசிவனே மோக்ஷகர்த்தாவென்று சகலசாஸ்திர நிர்ணயம். முகுந்தசத்தத்துக்கு பாவத்தினின்றும் தரித்திரத்தினின்றும் விடுவிக்கிறதினாலே முகுந்தசத்தமேயல்லால் மோக்ஷத்தைக் குறித்தல்ல. ஆகையாற் சாம்பசிவனொருவரே மோக்ஷகர்த்தாவென்று சகலசாஸ்திர நிர்ணயம். நித்தியத்துவ முதலாக மோக்ஷகர்த்தா வென்கிறவரை பதினைந்து லக்ஷணத்தாலும் சாம்பசிவனே வஸ்துவென்கிறதை சுருதியுத்தி அனுபவத்தினாலும் சொன்னோம், சகலரும்சாம்பசிவனே வஸ்துவென்று திடப்பட்டு அவரை உபாசித்து சதுர்வித புருஷார்த்தம் அடைடயக்கடவர்.

(இன்னும் வரும்.)

வி. குஞ்சிதபாதம் பிள்ளை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

முப்பொருள் ஆராய்ச்சி.

தோகுதி-8-பகுதி-6-பக்கம்-137 தொடர்ச்சி.

இந்தச் செய்தியைக் கர்த்தா விரக்கத்தினால் அறிந்து விருப்பத்துக்கேற்ற தனுவைக்கொடுத்து அந்தத் தனுவினிடமாகக் கன்மத்தைக்கூட்டிப் பொசிப்பித்தார். ஆணவமலமே யான்மாவுக்குக் கன்மத்திலே விருப்பத்தைக் கொடுத்ததென்பதற்கு குழந்தை பிணியாளன் முதலிய வுவமைகள் வருமாறு. (1) குழந்தைக்குப் பாலிலே யுண்டாகிய விருப்பம் தாய் கொடுத்த விருப்பமோ? தாய் கொடுத்த விருப்பமானால் அவள் பால் கொடுத்த நேரமெல்லாம் குடிக்கவேணும். குடியாதபடியால் குழந்தைக்குள்ள விருப்பமுமன்று இனி யுண்மை யெப்படியென்னில் பசியே குழந்தைக்குப் பாலிலே விருப்பத்தைக் கொடுத்தது. விருப்பத்தைக் கொடுத்த பசியும் குழந்தைக்குப் பாலை யறிந்து கொடுக்கமாட்டாது.

விருப்பின குழந்தையும் பாலையறிந்தெடுத்துக் குடிக்கவுமாட்டாது விரும்பப்பட்ட பாலுங் குழந்தை வாயிலே யறிந்து வந்து புகுதமாட்டாது. இந்தச் செய்தியைத் தாயானவ ளிரக்கத்தினாலே யறிந்து பாலடையில் பாலைவிட்டுக் கொடுத்தாள். குழந்தையொன்று, பசியொன்று, பாலொன்று தாயொன்று பாலடையொன்று ஆக ௫ குழந்தையைப்போலு மாணவமலம் பாலைப்போலுங் கன்மம் தாயைப்போலு மான்மா பசியைப்போலு மாணவமலம் பாலைப்போலுங் கன்மம் தாயைப்போலும் சிவன் பாலடையைப்போலும் சரீரம். பிணியாளனுக்கு மருந்திலே யுண்டாகிய விருப்பம் பரிகாரி கொடுத்த விருப்பமோ? பிணியாளனுக்குள்ள விருப்பமோ? பரிகாரி கொடுத்த விருப்பமானால் பரிகாரி மருந்துகொடுத்த நேரமெல்லாங் குடிக்கவேண்டும். குடியாத படியினாலே பரிகாரி கொடுத்த விருப்பமன்று. இனி வுண்மை யெப்படியெனில் அப்பிணியே பிணியாளனுக்கு மருந்தில் விருப்பத்தைக் கொடுத்தது. விருப்பத்தைக் கொடுத்த பிணியும் பிணியாளனுக்கு மருந்தை யறிந்தெடுத்து குடிக்கமாட்டான். விரும்பப்பட்ட மருந்தும் பிணியாளன் வாயில் வந்து புகுதமாட்டாது. இந்தச் செய்தியைப் பரிகாரி யிரக்கத்தினாலே யறிந்து மருந்தை யொரு பாத்திரத்தில் விட்டுக் கொடுத்தான். பிணியாளன் (௧ பிணி (௧) மருந்து (௧) பரிகாரி (௧) பாத்திரம் (௧) ஆக ௫. பிணியாளனைப்போலு மான்மா. பிணியைப்போலும் ஆணவமலம். மருந்தைப்போலும் கன்மம். பரிகாரியைப்போலும் சிவன். பாத்திரத்தைப்போலும் சரீரம் ஆக ௫

குருடனுக்குக் கோலிலே யுண்டாகிய விச்சை கோல்கொடுத்த விச்சையானால் கொடுத்த நேரமெல்லாம் பிடிக்கவேணும். அப்படிப் பிடியாமையாலே கோல் கொடுத்த விச்சையன்று. குருடனுக்குள்ள விச்சையானால் கோலை யிடைவிடாமல் பிடிக்கவேணும். அப்படிப் பிடியாமையினாலே குருடனுக்குள்ள விச்சையன்று இனி யுண்மை யெப்படியெனில், குருடே குருடனுக்குக் கோலிலே யிச்சையைக் கொடுத்தது. இச்சையைக் கொடுத்த குருடும், குருடனுக்குக் கோலை யறிந்தெடுத்துக் கொடுக்கமாட்டாது இச்சித்தக் குருடனும் கோலை யறிந்து எடுத்துக்கொள்ளமாட்டான் யிச்சிக்கப்பட்ட கோலும் குருடனை யறிந்தவன் கையில் பொருந்தமாட்டாது. இந்தச் செய்தியைக் குருடனுக்குரிமையுள்ளவர் இரக்கத்தினாலே யறிந்து கோலை யெடுத்துக்கொடுத்து அவன் கொண்டுபோய் விடச்சொன்ன விடங்களில் கோலைப்பிடித்துக் கொண்டுபோய் விடுவார்கள்.

குருடன் (க) குருடு (க) கோல் (க) கோலைப்பிடித்துச் செல்வோன் (க) இடம் (க) ஆ. ரு. குருடனைப்போலு மான்மா. குருட்டைப் போலு மாணவமலம். கோல்போலும் சரீரம். கோல்பிடித்துச் செல்வோனைப்போலுஞ் சிவன். இடத்தைப்போலும் புவனம். ஆன்மாவுக்குச் சரீரத்திலே யுண்டாகிய விருப்பம் சிவன் கொடுத்த விருப்பமோ ஆன்மாவுக்குள்ள விருப்பமோ சிவன் கொடுத்த விருப்பமானால் சிவன் சரீரங் கொடுத்த நேரமெல்லாம் பற்றவேண்டும். பற்றாதபடியினாலே சிவன் கொடுத்த விருப்பமன்று. ஆன்மாவுக்குள்ள விருப்பமானால் சரீரத்தை யிடைவிடாமற் பற்றிக்கொண்டே யிருக்கவேணும். அப்படிப் பற்றாத படியா லான்மாவுக்குள்ள விருப்பமன்று. இனிச் சித்தாந்தமெப்படியெனி லாணவமலமே ஆன்மாவுக்குச் சரீரத்திலே விருப்பத்தைக் கொடுத்தது. விருப்பத்தைக் கொடுத்த ஆணவமலமும் ஆன்மாவுக்குச் சரீரத்தை யறிந் தெடுத்துக் கொடுக்கமாட்டாது. இந்தச் செய்தியைச் சிவனிரக்கத்தினாலே யறிந்து அவன் விரும்பின சரீரத்தைக்கொடுத்து விரும்பின புவனங்களிலே கொண்டுபோய்விட்டு விரும்பின கன்மங்களைப் பொசிப்பிப்பான். குருடன் முதல்வனோ கோலைப்பிடித்துச் செல்வோன் முதல்வனோ? கோலைப்பிடித்துச் செல்வோன் முதல்வனானால் குருடனுக்குக் குளக்கரைக்குப் போகவேணுமென் றிச்சையானால் கோலைப்பிடித்துச் செல்வோன் கோயிலுக்கு வாவென் றழைத்தால் வரான். ஆகையினாலே கோலைப்பிடித்துச்செல்வோன் முதல்வனல்லன். குருடன் நினைத்தபடி குளக்கரையிலே கொண்டுபோய் விடுகையாலே; குருடனே முதல்வன். ஆன்மா முதல்வனோ சிவன் முதல்வனோ? சிவன் முதல்வனானால் ஆன்மாவுக்குத் தனுகரணாதி விருப்பமிருக்கையில் சிவன் மோக்ஷந் தருகிறேனென் றழைத்தால் அவர் வசத்தில் செல்லானாகையால் சிவன் முதல்வனல்லன். ஆன்மா விச்சித்தபடிக்குத் தனுகரணாதிகளைக் கூட்டி கன்மத்தைப் புசிப்பவனாகையினாலே ஆன்மாவே முதல்வன்.

குயவன் பாண்டங்களை வனையுமிடத்துத் தன்னுடைய நினைவின்படி வனைவானோ பிறருடைய நினைவின்படி வனைவானோ? தன்னுடைய நினைவின்படி வனைவானானால் ஒருவடிவாகவே வனைகிறபடியாலே தன்னுடைய நினைவின்படி வனைவானல்லன். பிறருடைய நினைவின்படி வனைவான். குயவன் (க) மண் (க) பாண்டம் (க) பிறர் (க) ஆக ச. குயவனைப் போலுஞ் சிவன். மண்ணைப்போலு மாயை. பாண்டத்தைப் போலும் சரீரம். பிறரைப்போலு மான்மாக்கள். சிவன் சரீரத்தைப் படைக்குமிடத்து தன்னுடைய நினைவின்படி படைப்பானோ? ஆன்மாக்கள் நினை

வின்படி படைப்பானே? தன்னுடைய நினைவின் படைப்பானானாலொரு வடிவாகவே படைக்கவேணும். அப்படி படையாமல் பல வடிவாகவே படைக்கிறபடியாலே தம்முடைய நினைவின்படி படைக்கிறவர் அல்லர். ஆன்மாக்களுடைய நினைவின்படியே படைப்பார்.

வண்ணான் புடைவையிலுள்ள அழுக்கை யுவர்ச்சாணம்கூட்டிப் போக்குவதுபோல சிவன் ஆன்மாவிடத்துள்ள ஆணவமலத்தை மாயா கருவிகளைக் கூட்டிப் போக்குவார்.

மலபரிபாகமாவது:—பரி=யுபசருக்கம், பாகம்=திருவு. ஆன்மாவுக்குப் பக்குவம் வந்தகாலத்தில் மலசத்தி ஆன்ம ஞானத்தை மறையாதிருத்தல்.

சத்திநிபாதம்:—சத்தி=சிவசத்தி. நி=உபசர்க்கம், பாதம்=விழுதல், பதிதலுமாம். மலநீங்கின வுயிரிலே சிவசத்தி விளங்கித்தோன்றுதலாம்.

இருவினையொப்பாவது:—உலகத்தார் திரணம் பதர் முதலாயின பதார்த்தங்களை விருப்பு வெறுப்பின்றிக் கண்டாற்போல பக்குவான்மாவானவன் நல்வினை தீவினையிலும் விருப்பு வெறுப்பின்றிக் காண்டல். உலகத்திலே யெல்லாராலும் விரும்பப்பட்ட பதார்த்தங்கள் பொன், வெள்ளி செல்வம், பெண், பால், தயிர், நெய், சந்தனம் முதலியன. வெறுக்கப்பட்ட பதார்த்தங்கள் புலி, கரடி, பாம்பு, தேள், நட்டுவக்காலி, தரித்திரம், வியாதி முதலாயின. விருப்பும் வெறுப்புமில்லாத பதர் திரண முதலாயின. இருவினை யொப்புக்கு யின்னுமோ ருவமை வருமாறு- ஒருவன் வைப்பாட்டிக்கு வேண்டிய ஆடையாபரணங்களும், வீடும், புசிப்புங் கொடுத்து அவள்வீட்டிலே பதினைந்துநாளுங் குடியிலுள்ளாருக்கு வேண்டிய ஆடையாபரணங்களும் வீடும் பொசிப்புங்கொடுத்து அவள்வீட்டிலே பதினைந்து நாளுமாகப் பொசித்து வருகையில் இல்லறநூல் கேட்டு தற்புடைய மனைவியுடனே கூடியிருந் தில்லறஞ்செய்கிறதே முத்தியென்றறிந்து வைப்பாட்டியை யிழந்து அவள் மேலே முன்னர் ஒருவியிருக்கப் பொருதவன் அவனைப் பள்ளர் முதலியர் பிடித்தீர்த்தவிடத்தும் விருப்பின்றி விட்டுநீங்கி இல்லாளோடுகூடி இல்லறம்நெடுநாட்செய்துக்கொண்டு வருகிற நாளையில் துறவறநூல்கேட்டுத் துறவறமே முக்கியமென்றறிந்து குடியிலுள்ள வில்லாளையும், வைப்பாட்டியைப்போல விட்டுநீங்கி அவ்விருவரையும் விருப்பு வெறுப்பின்றிக் காண்டற்போல, ஒருவன் பாவமும் புண்ணியமும் செய்துக்கொண்டு வருகையிலே அறநூல்கேட்டுப் புண்ணியமே முக்கியமென்றறிந்து பாபத்தைத் தீங்கென்றறிந்து விட்டு நீங்கி நெடுங்காலம் புண்ணியமே செய்துக்கொண்டு வருகையில் ஞான சாத்திரத்தைக்கேட்டு ஞானமே முக்கியமென்றறிந்து புண்ணியமும் சனனமரணத்தைக் கொடுக்கையினாலே பாபத்தைப்போலத் தீங்கென்றறிந்துவிட்டு நீங்கி யவ்விரண்டினையும் விருப்பு வெறுப்பின்றிக் காண்டல்.

(இன்னும் வரும்)

73

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

விநாயகப் பிரபாவத்தில் கண்டது.

தூர்வை யாசகப் படலம்.

———— 0: ————

தொகுதி - 8 - பகுதி 6 - பக்கம் - 144 - தொடர்ச்சி

அவ்வேண்டுகோளுக்கிணங்கி, கணேசமூர்த்தி கருணையுடையவராய் ஓ அரசனே ? இதுகாறும் உன்னிடத்தில் நிலைபெற்று பிரமஞானம் போலிருந்த ஞானம் பிரமஞானமன்று 'அது பிராந்திப் பிரமஞானம் உன்னைப் பிரமமென்றெண்ணியது சுருதி வாக்கியத்தைக் கொண்டா ? குருபதேசத்தைக் கொண்டா ? உன்னுடைய அநுபவத்தைக் கொண்டா ? சுருதிவாக்கியத்தைக் கொண்டெனின் "ஏகமே வாத்வைதம் பிரஹ்மா" என்கிற வாக்கியத்தில் பிரமம் ஒன்றே அது, அதனின் வேறாக எண்ணப்பட்ட பசு பாசங்களில் ஒன்றாகமலும், வேறாகமலும், ஒன்றாகியும் ஒன்றல்லவாகியும், வேறாகியும் வேறல்லவாகியும் அந்நியமாயிருப்பது என்று பொருள் படுகிறதே யன்றி, பிரமமொன்றே என்றும் அப்பிரமத்தைத் தவிர இரண்டாவது பொருளில்லை என்றும் அப்பிரமம் நீயே என்றுமா பொருள்படுகின்றது. அப்பொருளே சத்தியமாயின் "அது நீயானா' யென்னும் தத்துவமசி வாக்கியமாகிய குருபதேசத்திற் கென்செய்வாய். ஏனெனின், இரண்டாவது பொருளில்லையாயின்" அது என்பது எது, "நீ" என்பது யார், "ஆனாய்" என்னும் அநுபவநிலை எது; உன்னுடைய அநுபவமெனின் உண்ணும்பொருளைக் கண்டால் உண்பதும், உறக்கம் வருங்கால் பிரஜ்ஞை கெட்டுறங்குவதும், மைதுனங் கூடுங்கால் வெறுப்பின்றிச் செய்வதும், அவா வருங்காலத்து அவாவுதலும், அவ்வவாவழிச் செல்லுங்கால் விருப்பு வெறுப்படைதலும் அவையடையு நெறியானே இருவினை யீட்டுதலும் அது யீட்டிய துணையானே சுகதுக்கங்களை மாறி மாறி யனுபவித்தலுமே யன்றி வேறென்ன அனுபவம் உனக்கு அமைந்து இடக்கின்றன.

ஓ சநகனே! இன்னமும் உன்னுடைய நிலைமையைக் கூறுகின்றேன், மனவாக்குக் காய முதலிய கரணங்களைப் பற்றி ஏகதேசமாய் நிகழுஞ் சுட்டுணர்வாகிய பாசஞானத்தோடு கூடினவனாய் அந்த ஞான மிகுதியால் தேகத்தில் வாஞ்சையுடையவனாய் கொல்லாமையாதி நற்குணங்க ளனைத்தையும் ஒருங்கேயோட்டவல்ல எத்தனையோ தீயகுணங்களையுட்கொண்டு எத்தனையோ கோரவிருத்திகளையும், எத்தனையோ பக்ஷபாதச் செயல்களையும், எத்தனையோ வன்குணங்களையும், எத்தனையோ பாழ்ங் கல்லாமையையும், எத்தனையோ அகந்தைகளையும், எத்தனையோ மனக் கள்ளங்களையும், சற்காரியங்களில் ஒரு சிறிதுஞ் செல்லாத எத்தனையோ அறியாமையையும், கதியுண்டாமென்றமைத்த அருண்மார்க்கத்தில் எவ்வளவுஞ் செல்லாமையையும், விருதாகோஷ்டிகளில் முற்பட்டுநிற்கு முயற்சியோடுகூடிய சிந்தனையையும் உடையனாய் நிற்றலே உன்னுடைய நிலைமை, உன்னைத் தான் சீவனாகிய பசுவென் றழைக்கப்படும். நிர்க்குணமாய் நிராமயமாய் நிரஞ்சனமாய் நிராலம்பமாய் நிர்விஷயமாய் நிஷ்களமாய் நிர்வசனமாய் நிர்த்தொந்தமாய் நித்தமுத்த சத்யபரமானந்த சொரூபமாய் அசங்கதமாய் சஞ்சலரகிதமாய் தானே தற்பிரகாசமும் பரப்பிரகாசமுமாய் எல்லாப்பொருளையும் இனிது விளக்குவதாய் விளங்கும் சருவேசுரனாகிய சங்கரனைத் தான் பிரம மென்றழைக்கப்படும் உன்னுடைய ஞானக்கிரியைகளை ஏகதேசப்படுத்தி சுட்டுணர்வுட்படுத்தி செப்பிற்காளிதம் போன்று அறியாமையை விளக்கும் அஞ்ஞானத்தையே பாசமென் றழைக்கப்படும். இவைகட்கு இயல்பாயுள்ள குணங்கள் பலவுண்டு. அவை ஏகமாகிய பதிக்கு ஒருவருமறிவிக்காம லறிகின்ற குணமும் ஆன்மாவுக்கு அறிவிக்குங் குணமு முதலாயின. அநேகமாகிய பசுவுக்கு அறிவித்தாலறிகின்ற குணமும் பிறருக்கு அறிவிக்கமாட்டாத குணமு முதலாயின. இருளாகிய ஆணவமலத்திற்கு ஆன்மாவேண்டுங் காரியத்தை மறைக்கின்ற குணமும் வேண்டாக்காரியத்தில் விருப்பங்கொடுக்கின்ற குணமு முதலாயின. இருட்சம்பந்தமுடைய புண்ணிய பாவமாகிய கன்மமலத்திற்கும் அசுத்தாசுத்தமாகிய மாயாமலத்திற்கும் ஆன்மா ஆணவத்தைப் பொருந்தினால் ஆணவத்தி லழுத்துவிக்கின்ற குணமும் பதியைப் பொருந்தினால் பதியி லழுத்துவிக்கின்ற குணமு முதலாயின.

இவ்வைந்து பொருளும் வியாபகம் வியாத்தி வியாப்பியம் என மூன்றுவகையிலக்கணங்க ளமைந்து விளங்கும். இவற்றுள் வியாபகமாவது நிறைந்திருத்தல், வியாத்தியாவது சமநிறைவாயிருத்தல். வியாப்பியமா

வது அடங்கியிருத்தலாம். அஃதெவ்வாறெனில், சமுத்திரம் வியாபகம் அதுபோலும் பதி, அச்சமுத்திரத்தில் தண்ணீர் வியாத்தி அதுபோலும் பதியிடத்தில் ஆன்மா, அத்தண்ணீரில் உப்பு வியாப்பியம் அதுபோலும் ஆன்மாவிடத்தில் மல முதலியவைகள். இவ்வாறு இவ்வைந்து பொருளும் ஒன்றிலொன்று கலந்து அடங்கியிருப்பது. இங்ஙனம் அடங்கியிருக்கும் மூன்றும் அநாதி நித்யமாயிருப்பது. எங்ஙனமெனில் சூரியனுள்ளபோதே கண்ணும் அக்கண்ணை மறைத்த இருளும் அநாதி நித்தியமாயிருத்தல்போலாம். ஆன்மாக்கள் ஆணவமலத்திற் கிடக்கின்றவர்களாதலால் அவ்வாணவமலம் ஆன்மாக்களுக்குக் கன்மத்திலே விருப்பத்தைக் கொடுத்தது. இச்செய்தியைப் பதியறிந்து இரக்கத்தினாலே அவ்வான்மாக்களது விருப்பத்திற்கேற்ற மாயா கருவிகளைக்கொடுத்து அவைகளினிடமாகக் கன்மங்களைப் புசிப்பிப்பான், அநாதியிலே பிரபஞ்சமுண்டாகு முறைமை இவ்வாறாகும். ஆனால் ஆன்மாக்களுக்கு ஆணவமலம் இயற்கையோ செயற்கையோ வெனிற் இயற்கையானால் பாலுக்குவெண்மையுங் கரிக்குக் கருமையும் ஒருக்காலும் விட்டு நீங்காததுபோல ஆன்மாக்களுக்கு ஆணவமலம் ஒருக்காலும் விட்டுநீங்காது. செயற்கையானால் வெள்ளை வத்திரத்தில் அழுக்கேறுவதுபோல முத்தியிலும் வந்து பொருந்தும். ஆதலால் இரண்டுமன்று' நெல்லுக்குமியும் செம்புக்குக் களிம்பும் கடனீருக்கு உப்பும்போல ஆன்மாக்களுக்கு ஆணவமலம் அநாதி செயற்கையென்றும் அநாதி சையோகமென்றுஞ் சொல்லப்படும்.

(இன்னும் வரும்)

ஓம் சிவகணேச கந்தப்ப சபையில் ஒருவராகிய,

கி இராஜு கிராமணியார்,

இராஜ விலாஸ், திருமயிலை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பதிபசு பாச விளக்கம்.

நம்பிக்கை யுள்ளார் நலியா தருளீயுந்
தும்பிக்கை யுள்ளான் துணை.

சீரானை யுரியானைத் தந்தையெனப் பெற்றானைச் செவ்வேலோன்றம்
பேரானை யன்பருளம் பேரானைத் தீவினைகள் பெயர்க்கு நல்ல
பூரானைப் புள்ளிமயி லூர்ந்தானைப் புயசைலத் தொளிசேர் நீபத் [வாம்
தாரானைத் தன்னையெற்குத் தந்தானைத் தாள்வணங்கிச்சார்ந்து வாழ்

குருவணக்கம்.

வஞ்சகத்தினி லொன்றிடான் மாது யரியும்
அஞ்சகத்தினி லொன்றிடா தழித்தழி வெய்தும்
வெஞ்சகத்தினி லொன்றிடா மெய்க்குரு பாதம்
நெஞ்சகத்தினி லொன்றுமா றிறுவி வாழ்ந்திடுவாம்.

நூல்.

பூவிற்றாமரை சுடரினிற் சூரியன் புகலும்
பாவிற்றான்வெள்ளை பாடையிற் பைந்தமிழ் பரவுஞ்
தேவிலாயிழை பாகனைப் போனனி சிறக்கும்
தாவிலாச்சம யங்களிற் சைவசித் தாந்தம்.

விதிமலிந்திடு நான்மறை முடிவினில் விளங்கு
மதிமலிந்திடு சைவநற் றிறமது வகுப்பில்
பதிமலிந்திடு முயிர்த்தொகை பசுத்துவம் கன்மம்
அதிமலிந்திடு மாயையோ ரிரண்டெனச் சொல்வர்.

அநாதி நித்திய வஸ்து.

ஒன்றதாகிய கடவுளு மொருமுடி வில்லா
தொன்று மன்றுயிர் வருக்கமு மோதிருள் கன்மம்
அன்றுமோ ரிருமாயையு மாகவே சொல்ல
நின்றவாறிரண் டாதியில் நித்தியப் பொருளே

பதியியல்பு.

சாதலும் பிறந்திடுதலுந் தனக்கிலான் யாவன்
ஓது மன்னவன் பதியென வுரைத்திடப் படுவன்
சாதலும் பிறந்திடுதலுந் தமக்குள யாவை
ஓது மன்னவை பசுக்களென் றுரைத்திடப் படுமால்.

தாமரைத்தலை யிருந்திடு தலைவனுஞ் சாற்று
மாமணித் துளவணிந்திடு தோன்றலுஞ் சுருதி
யாமறைத் தலையியம்பிய வானவர் யாவருந்
தாமரித்திடு பசுக்களே சங்கரன் பதியே.

ஊரிலாதவன் குணங்குறியி லாதவ னுரைக்கும்
பேரிலாதவன் முன்னொடு பின்னிலான் பிறிதோர்

சாரிலாதவன் ஒப்பிலா னுயர்விலான் றழைத்த
சீருலாஞ் சிவஞானத்தா லறிபவன் சிவனே,

பெரிய னாகுவன் சிறியவனாகுவன் பேசில்
அரிய னாகுவன் எளியனுமாகுவன் கன்று
விரியு மெவ்வுல கெங்கணும் வியாபியாய் விளங்கி
உரியகட்டு வீடொன் றிலாதுற்றவன் சிவனே.

உய்வணந் தெரியா திருண்மலத்திலே யுயங்கி
மெய்வணம் விடுத்திருளென விளங்கு மன்னுயிரை
உய்வணந் திருவுளத் தெழுகருணை கொண்டோவா
வைவணத் தொழில் செய்குவன் சத்தியா லவனே.

சுத்தமாகிய வருவமோர் நான்கு சொல்லுபயம்
வைத்தவொன்று மற்றுருவமு நான்கென வமைத்து
முத்திறத்தினி லொன்பது பேதமாய் முதல்வன்
வித்தகத்திரு தொழிலைந்து முஞற்றுவன் விருப்பால்.

சுத்தமாயையிற் கிருத்தியந் தான்செய்வர் சொல்லி
சுத்தமாயையி லனந்தரைப் பகுதியின் றொழிலுக்
கொத்தருத்திரர் தம்மையே வாயிலா வுறுவித்
தத்தனாரவ ரைந்தொழில் செய்குவ ரறிதி.

படைத்தலே முதலைந்தொழில் பண்ணுவ னாகில்
கிடைத்திடும் பெருவிகாரமா மவற்கெனிற் கேணீ
அடைத்த பல்விட மரவினை யடைந்திடாவாறு
படைத்த லாதியாற் றொடக்குறான் றுயிலாப் பரமன்.

ஆதவன் முனமவன் பெயர்க்கல் லெரியருளும்
போதலர்ந்திடும் புலர்ந்திடும் பூமிநீர் வற்றும்
ஆதவன்றனக் கங்கொரு விகாரமு மடையா
நீதரன்புடை யொற்றிவைத் தறிகுதி தேர்ந்து.

ஓதுமைந் தொழில் தம்முளே யேனைய வொழியக்
காதுமத் தொழில் செய்வதென் கண்ணுத லென்றுஞ்
வாதைதீர்த் தனுவர்க்கத் தையாற்றிடல் வரம்பில்
போதநல்கிடு மருட்டொழி லைந்தொழில் புகலில்.

பதிகுணம்.

அளவில் ஞானமு மளவிலா வாற்றலு மடங்கா
அளவில் போருளும் படைத்தனாதியே பாச
அளவில் நீங்கியே அளவிலா வின்பமுற் றயலார்
அளவிலே தடைப்படா வறுகுண முளனண்ணல்.

சுருதிசிர்க்குண னென்ற தென்னென்றிடிற் சொலக்கேள்
கருது மாயையின் முக்குணங் கடந்தவன் கருத்து
பெரிதும் வல்லர்போ லூற்றைவாய் பிளந்துபல் பேயர்
திரிவெறும்பொருள் கொள்ளுவர் நரகினிற் றிளைக்க.

பதிவடிவு.

மந்திரங்களும் பதங்களும் புவனமும் வன்னம்
வந்ததத்துவங் கலைகளும் வடிவ மாமன்றி
எந்தை எம்பிரா னென்னை யாளிறையவர்க் கென்றும்
முந்து பேரருள் வடிவமாய் வருமென மொழிவர்.

பதிநாமம்.

எல்லவர்க்கு மில்லாத தோர்மங்கல நாமம்
சொல்லின் வெம்பவந் துடைத்திடு துல்லியநாமம்
பல்வகைப் பொருளுந் தரும்பரம நன்னாமம்
செல்லு மெம்பெருமாற் குயர்சிவ னெனுநாமம்.

என்னையுந் தனக்கின் னடித்தொழும்பினுக் கெடுத்துப்
பொன்னின் சேவடி கழிமுடைப் புன்சிரம் பொளித்த
அன்னை பாகனுக் காயிரமாயிர நாமம்
இன்னும் பன்னுவர் சிவனென்பதியற் பெயராமே.

பதியருண்முறை

போகியா யிருந்துயிர்கட்குப் போகத்தை யுதவும்
யோகியா யிருந்துயிர்கட்கு யோகத்தை யுதவும்
தேகமேவிய சரமசரங் கட்குச் சிவனே
ஏகனாயக னுள்ளொடு புறம்புமா யிருப்பன்.
மாசுபற்றிய வுயிரெனும் பொன்னினை மன்னு
மேசலில் பிறப்பிறப்பெனு நெருப்பிடை யிட்டுத்
தூசுநீக்கிடு ஞானமா மருந்தினைத் தூவி
ஆசகற்று தட்டானெங்க ளரனெனு மண்ணல்.

வேதநான்கையு மாகமத்தி றனையும் வேறு
போதமர்னவை யாவையுங் கடந்திடு புனித
நாதனார் திறனுனுரைத் திடுவது நாடில்
ஆதவன்றனைக் கரத்தினாற் பற்றல் போலாமே.

(இன்னும்வரும்)

க. வேலுப்பிள்ளை.

மதிப்புரை.

சிவப்பிரகாசப் புத்துரை.

"குறைவிலருள் ஞானமுதல் கொற்றங்குடி யடிகள்
நறைமலர்த்தாட் கன்புபெற்று நாமிருப்ப தெந்நாளோ"

மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் மிகச்சிறந்ததும் கொற்றவன்குடி - உமாபதிசிவாசாரியர் அருளிச் செய்ததும், முதனூலாகிய சிவஞான போதத்தைப்போல் மிகச்சுருங்கியும் வழிநூலாகிய சிவஞான சித்தியாரைப்போல் மிகவிரிந்தும் இல்லாமல் சித்தாந்தத்திட்ப நுட்பங்களை மிகத் தெளிவாக விளக்க வெழுந்தது சிவப்பிரகாசம். இதனைச் சித்தாந்த சாத்திரம் பயில விரும்புவோ ரெல்லாம் முதற்கண் ஆரம்பிப்பர். இவ்வளவு மாட்சிமை தங்கிய இந்நூலுக்குப் பழைய உரைகள் இரண்டுள. ஒன்று மதுரைச் சிவப்பிரகாசர் செய்தது. மற்றையது இலக்கணம் சிதம்பரநாத முனிவர் இயற்றியது. அவ்விரண்டுரைகளும் இப்போது தனிப்புத்தகரூபமாகக்கிடைப்பதருமை. மேலும், அவை தற்காலத்திற் கேற்ப எளிய நடையில் அமைக்கப் பெற்றில. இக்குறையை நீக்குவான் கருதிப் போலும் கொழும்புநகர் உயர் நீதித்தல நியாயதுரந்தரராக விளங்கும் ஸ்ரீமான் மு. திருவிளங்கம் அவர்கள் பழைய உரைகளையும் ஏனைய சாத்திரங்களையும் தழுவியும் பலவிடங்களில் மாறுபட்டும் புதுவதாக ஒருரையெழுதி இப்புத்தகத்தைநன்றாய் அச்சிட்டுவெளி யிருக்கின்றார்கள். இப்பதிப்பின் விசேஷமென்னெனின் பதவுரை, குறிப்புரை, பொழிப்புரை, அருபயதவுரை, விஷய அகராதி முதலியன ஒருங்கு செறித் திருத்தலேயாம். இவ்வண்ணமே மற்றைய சித்தாந்த சாத்திரங்களுக்கும் இவர்கள் உரை எழுதுவார்களாயின் பேருபகாரமாகும். இதன் விலை ரூபா 1—12—0. பிரதிகள் சமாஜ ஆபீசிற் கிடைக்கும்.

திருப்புகழ்த்திரட்டு

"மாநுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்காய
மானிடத் தைந்துமாடு மரன்பணிக் காகவன்றோ
வானிடத்தவரு மண்மேல் வந்தரன் றனை யர்ச்சிப்பர்
ஊனெடுத் துழலுமூம ரொன்றையு முணராரந்தோ."

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம். இன்ன காலத்திலே இந்தச்சரீரம் நீங்கும் என்பது நமக்கு விளங்காமையால், நாம் எக்காலத்தும் கடவுளை வழிபடல்வேண்டும். கடவுளை வழிபடும் முறைமையில் ஒன்று, தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலிய திருவருட்பாக்களால் அவரைப் பாடுதலேயாம்.

இனித் திருப்புகழ் என்பது அருணகிரிநாதர் முருகக்கடவுள் மீது பாடிய பாக்களாம். அதன்தொகை 16000 என்ப. அது "எம் மருணகிரி நாதர் ஓது பதினாறுபிரத் திருப்புக ழமுதுமே" என்னுஞ் செய்யுளால் அறியக்கிடக்கின்றது. இவற்றுள் சில ஆயிரம்பாக்களே தற்காலம் அச்சிட்டு வழங்கப் பெறுகின்றன.

கொழும்பு நகர் நியாயதுரந்தரர் ஸ்ரீமான் மூ. திருவிளங்கம் அவர்கள் முக்கியமான 150-பாசுரங்களைத் திரட்டியும், துதி, அருள் வேண்டல், பிரபஞ்ச வெறுப்பு, அறிவுறுத்தல், மறுபிறப்பு, சிவஞானம், பூசை, அனுபூதி, அத்துவித மௌனம், முத்தி முதலான இருபத்தைந்து அதிகாரங்களாக வகுத்தும், சந்தங்களின் அழகு கெடாதபடி வார்த்தைகளைச் சந்திபிரித்தும், கடைசியில் ஒரு அரும்பத உரையைச்சேர்த்தும், திருப்புகழ்த்திரட்டு என்னும் பெயருடன் இதனை அச்சிட்டிருக்கின்றனர். அவர்கள் எழுதிய அரும்பதவுரையானது சொல்லளவில் நிற்காமல் பற்பல புராணேதிகாச சரித்திரங்கள், சரித்திரக்கருத்துக்கள் முதலியவற்றைத் தேவாராதிமேற்கோளுடன் ஒவ்வொரு பாட்டிற்கும் பொருந்தக் கொண்டிருத்தல் மிகவும் பாராட்டற்பாலதாகும். இவ்வரிய புத்தகத்தின் பதிப்பாசிரியர் கந்தாலங்காரத்திற்கும் தத்துவார்த்த வுரை யொன்று எழுதி அச்சிட்டு வருவதாக அறிகிறோம். இங்ஙனமே அவர்கள் பல அரிய நூல்களை அச்சிட்டுபகரிக்கும்படி எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பாராக.

புத்தகத்தின் விலை ரூபா 1—6—0 சமாஜ ஆபிசிற் கிடைக்கும்.

"கந்தரனுபூதிபெற்றுக் கந்தரனுபூதி சொன்ன
எந்தையருணாடி யிருக்கு நாளெந்நாளோ."

சே. வெ. ஜம்புலிங்கம்.
தனபாலகர்,
சைவசித்தாந்த மகாசமாஜம்.